Date: March 12,2011

DEAR-Canada

# Disaster Emergency Assistance Relief-Canada

அன்புள்ளங்களுக்கு,

DEAR-Canada வின் நன்றியுடனான வணக்கம். கடந்த ஜனவரி மாதம் கிழக்கிலங்கையில் விடாதுபெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ள அநர்த்தத்தை தொடர்ந்து DEAR-Canada தன் சேவையை ஆரம்பித்து, அதன் மூலமாக நமது தாயகஉறவுகளுக்காக வழங்கிய உதவியினை உங்களிடம் பகிர்ந்து கொள்கின்றோம்.

DEAR-Canada வினால் மேற்கொள்ளப்பட்ட மூன்றுகட்ட உதவி வழங்கல்களுக்கு நிதி அன்பளிப்புச் செய்த நல்லிதயம் கொண்ட உங்களுக்கு முதலில் சிரம்தாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிழக்கிலங்கையில் கடந்த 20வருடங்களாக தன்னார்வத்தொண்டில் ஈடுபட்டு அங்குள்ள மக்களின் உடனடித் தேவைகள் மட்டுமன்றி தவணைமுறையிலான உதவிகளையும் சலிக்காது வழங்கிவரும் **Koinonia** என்ற நிறுவனத்தின்மூலம் இப்பெருங்காரியத்தை மனமகிழ்வுடன் நீதியாகவும் நேர்மையாகவும் செயதமைக்காக நன்றியுடன் பாராட்டையும் DEAR-Canada சார்பாக **Koinonia** விற்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெள்ளத்தால் அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்த பல்லாயிரம் மக்களின் **முதல்கட்டமாக** ஆரம்பத்தில் கனடா பாடும்மீன்களினால் அன்பளிப்புச்செய்யப்பட்ட 3000.00 கனேடிய டொலர்களில் **வவுணதீவு** மற்றும் **பறங்கியாமடு** கிராமங்களில் 1200குழந்தைகளுக்கு 1Kg.நிறையுள்ள உலர்பால்மா தாமதமின்றி வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து **இரண்டாம்கட்டமாக** **பெரியபோரதீவுபற்று பிரதேசசபை** பிரிவிலுள்ள 14 முகாம்களில் தங்கியிருந்த 1290 குடும்பங்களுக்கு பாய், கம்பளிப்போர்வை மற்றும் பெண்களுக்கான சுகாதார அடைதிணிகள் என்பன வழங்கப்பட்டன.

இரண்டுவாரங்களின் பின்னும் அடைமழைதொடர மீண்டும் வெள்ளப் பெருக்கேற்பட்டது ஒருமாதகால தொடர் மழையினால் மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் யாவும் வெள்ளத்தால் அள்ளிச்செல்லப்பட்டன. அதன் காரணமாக DEAR-Canada தனது **மூன்றாம்கட்ட** நடவடிக்கையாக மாணவர்களுக்கான கல்வித் தேவைகளில் கவனத்தை செலுத்தியது. மாவட்ட அரசாங்கஅதிபர் கல்வித்திணைக்கள வலையகல்வி அதிகாரிகளின் ஆலோசனைகளின் மூலமும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதுடன் மிகவும் பின்தங்கியதும் பொருளாதார வசதியற்றதுமான 7 பாடசாலைகளைச் சேர்ந்த முதலாம் வகுப்புமுதல் 13 ஆம்வகுப்பு வரையிலான 1400 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களை வழங்குவதற்கு தீர்மானித்து அதனையும் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம்.

எம்மக்களின் துயர்துடைக்க மனம்நிறைந்து நீங்கள் தந்த ஒவ்வொருடொலரும் **இலட்சம்ரூபாய்களாக** வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பரிதவித்த சுமார் 4000 குடும்பங்களுக்கு இவ்வாறு தாமதமின்றி உதவ முடிந்த மைக்காக உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் என்றும் நல்ஆசியையும் சௌபாக்கியமும் கிடைக்கட்டும்.

மேலும் DEAR-Canada வின் **நான்காம்கட்ட உதவியாக** தொலைவிலுள்ள பாடசாலைக்கு நடந்து செல்லும் 50 மாணவர்களுக்காக துவிச்சக்கரவண்டியினை வழங்கவுள்ளோம் அதற்கான தாராள உதவியையும் உங்களிடம் நாடிநிற்கின்றோம். சிறுதுளி பெருவெள்ளம்! சிந்தாமல் சிதறாமல் ஒவ்வொருசதமும் முறையாக நேர்மையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உரியமுறையில் பயன்படுத்தப்படும் என்பதை உறுதிசெய்கின்றோம்.

வங்கிக்கணக்கில் வைப்பிலிடுவதற்கு :TD Canada Trust, Account name: DEAR Canada,
Transit # 1035 Accounts # 5009293

நன்றியுடன்

Ajantha Gnanamuttu

DEAR-Canada **Relief information please views YouTube: http://www.youtube.com/watch?v=5mmaw4MY7wI**